



# சமர்ப்பணம்

அருமைத் தந்தைக்கு காணிக்கை
எமது குல விளக்காய்,
ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்புடனும், பரிவுடனும்,
பாசத்துடனும் வளர்த்து எம்மை
ஆளாக்கிய எம் அன்புத் தந்தையே!
என்றும் எம் இதயக் கோயிலில்
குடியிருக்கும் குல விளக்கே!
உங்கள் ஆத்மா சாந்திக்காக
எல்லாம் வல்ல குல தெய்வங்களை
இறைஞ்சி நெஞ்சம் நிறைந்து
நிலை கொண்ட பாசத்தோடும்
பணிவோடும் எம் கண்ணீரினால்
கழுவிய தங்கள் பாதக் கமலங்களுக்கு
இச் சிறு மலரைச்
சமர்ப்பிக்கின்றோம்.



**இவ்வண்ணம்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் விஸ்வநாதர் காசிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள்.

இந்து மாகடலின் முத்தென விளங்கும் ஈழமணித் தீவின் வட பால் அமைந்த இலங்கைத் தீவின் தலையாய் நிமிர்ந்திருந்து தரணி போற்றும் பதியாம் யாழ்ப்பாணம். சைவமும் தமிழும் கைகோர்த்து தழைத்தோங்கும் பதியதனில் தென்மராட்சிப் பிரிவினில் கழனிகள் சூழ்ந்த ஊர் தனங்கிழப்பு.

அவ்வூர்தனில் விதானையாராகக் கடமையாற்றிய விஸ்வநாதரும், அவ்வூர் வேலுப்பிள்ளை மகள் காமாட்சியும் வதுவை செய்ததனால் பெற்றெடுத்த புத்திரனே காசிப்பிள்ளை. காலனும் இவரை தாயின் மடியில் தவழவிடாது தாயின் ஆத்மாவை இறைவனடியில் சேர்த்ததனால் தாயின் அரவணைப்புக்காக தவித்திருந்த பிஞ்சுப் பாலகன் காசிப்பிள்ளையை அன்புப் பேர்த்தி அன்னப்பிள்ளை அன்புடனே குணமென அழைத்து அமுதூட்டி வளர்த்திட்டாள். பள்ளிப்பாலகன் குமாரசுவாமி சிற்றப்பாவும் தயவுடனே அன்பு செலுத்தி வளர்த்திட்டார்.

தாரத்தை இழந்து தனித்துவிட்ட விஸ்வநாதருக்கு பெற்றோர் அவ்வூர் செல்லையாவின் மூத்த மகள் பகவதியை மறுமணஞ் செய்து வைத்ததனால், தாமோதரம்பிள்ளை, சண்முகநாதன், வேதநாயகி, தேவபாலன் ஆகிய நால்வரையும் அன்புச் சகோதரர்களாய் பெற்றுக் கொண்டார் காசிப்பிள்ளை. நான்கு சகோதரர்களும் உரிய காலத்தில் மணம்புரிந்து பிள்ளை செல்வங்களுடன் கனடாவில் களிப்புடனே வாழ்வது கண்டு அகமகிழ்வுற்றார் காசிப்பிள்ளை.

காசிப்பிள்ளையை சிற்றன்னை தன் புத்திரர் போல் அன்பு காட்டி வளர்த்திட்டார். ஐந்து வயதானதும் தந்தையும் சிற்றன்னை பகவதியும் தனங்கிழப்பு ஆரம்ப பாடசாலைக்கு அன்புடனே அனுப்பி வைத்தனர். ஆரம்பக் கல்வியை ஆர்வமுடன் கற்ற காசிப்பிள்ளையும் அறிவுத்தாகம் மிகவே மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் தனது இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். அங்கு ஒழுக்கத்திலும் கல்வியிலும், விளையாட்டுக்களிலும் சிறந்த மாணவனாகத் திகழ்ந்து தனது இடைநிலைக் கல்வியை முடிவுறுத்தி தனது வயல் புலங்களை வளம் பெறக் காத்தார். நற்பண்புடைய காசிப்பிள்ளைக்கு கல்வியும் ஒழுக்கமும் கொடுத்த பரிசிலாய் மலேரியா தடை இயக்கத்தில் உத்தியோகமும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு வளம் பெற்றதனால் பெற்றோரும் விருப்புடனே வரணி வடக்கில் வதியும் தம்பிராசா இராசலட்சுமி தம்பதிகள் பெற்றெடுத்த கமலாம்பிகை, ஞானாம்பிகை, பாலசுப்பிரமணியம், பஞ்சாதேவி என்னும் நான்கு பிள்ளைகளில் மூத்த மகளாம் கமலாம்பிகையை கடிமணஞ் செய்து வைத்தனர். இல்லக் கிழத்தியுடன் நகமும் சதையும் போல் இணைபிரியாதே இன்புற வாழ்ந்து சர்வானந்தன், சுதர்னாதேவி, வித்தியானந்தன், ரதீபா என்னும் பிள்ளைகளை பெற்றெடுத்தார்.

செல்வம் கொழிக்கும் நெல்வயல் சூழ்ந்த அறுகுவெளிப் பிள்ளை யாரையும், துண்டி வைரவரையும் தனங்கிழப்பில் தன் துணை என வழிபட்ட காசிப்பிள்ளை திருமணத்தின் பின் வரணி வடக்கு கும்பிட்டான் புலத்து பிள்ளையாரையும், குழந்தை பேரன் வைரவரையும் தன் துணையாக இறுதிக்காலம் வரை வழிபட்டார். கும்பிட்டான்புலம் பிள்ளையார் கஜமுகாசுரன் போர் உபயகாரராகவும், குழந்தைப் பேரன் வைரவரின் பூசாரியாகவும் செயற்பட்டது அவரின் இறைபக்தியை மேலும் வளர்த்தது. சிறு வயது தொட்டு முருகன் மீது கொண்ட பக்தி காரணமாக காவடித் கந்தனாக வீற்றிருக்கும் கதிர்காமக் கந்தனையும் அலங்கார முருகனாக வீற்றிருக்கும் நல்லூர் முருகனையும் போற்றி வழிபடும் பக்தனாகவும், நல்லூர் வேலவனின் தேர்த் திருவிழாவின் போது தேரோடும் பாதையில் ஆண்டுதோறும் அங்கப் பிரதட்சனம் செய்து அடி அழிக்கும் பக்தராயும் வாழ்ந்தார்.

ஆண்டவன் அருள்பெற்று தன் குடும்பம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கையில் மூத்த மகனாம் சர்வானந்தனை அன்பூட்டி அறிவூட்டி பேராதனை பல்கலைகழகத்தின் பொறியியளாளர் பட்டமும் பெற வைத்து உடுப்பிட்டியை சேர்ந்த இராதாகிருஷ்ணன் இராசமணி தம்பதிகள் பெற்றெடுத்த புத்திரியாம் கணக்காளர் அனுராதாவை மணஞ் செய்து வைத்தே காமாக்ஷி, லஷ்மிநாராயணன் எனும் பேரப்பிள்ளைகளைப் பெற்று, மகன் கனடாவில் வாழ்வதை எண்ணி இன்புற்றிருந்தார் காசிப்பிள்ளை.

மகள் சுதர்னாதேவியையும் அன்புடனே அறிவூட்டி வளர்த்து நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உத்தியோகத்தராகத் திகழவைத்து பருவத்தே பக்குவமாய் அவளுக்கு ஒட்டிசுட்டானைச் சேர்ந்த இராசதுரை இராசேஸ்வரி தம்பதிகள் பெற்றெடுத்த புத்திரனாம் வவுனியா மகாவித்தியாலய ஆசிரியருமாகிய முரளீதரனை வதுவை செய்து வைத்ததனால் டர்வின் ஹர்சன் என்னும் இரு பேரர்களைப் பெற்று, மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் குடும்பத்துடன் அமெரிக்காவில் களித்திருப்பதை எண்ணி மகிழ்வுற்றார்.

இளைய மகனாம் வித்தியானந்தனையும் பண்புடனே அறிவூட்டி கலை பட்டதாரியாக மிளிர வைத்து வடமாராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் நிகழ்ச்சி திட்ட உதவியளராக்கி தும்பளை பதிவாழ் ஆறுமுகம் விமலா தம்பதிகளின் மூத்த மகளாம் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராய் பணிபுரியும் நற்பண்புடையாள் நர்மதாவை மணம் முடித்து வைத்தே அபி என்னும் அன்பு பேரனையும் கண்டே இன்புற்றார். பேரரெல்லாம் வெளிநாட்டில் இருக்க பேணி அணைத்து வாழ முடியாத தன் அன்புப் பெருக்கெல்லாம் அபிராஜ் மேல் கொண்டு அன்புடன் அருகிருத்தி, மடியிருத்தி அன்பூட்டி முத்தமிட்டே பட்சணங்கள் பலவூட்டி அன்புடையால் தன் மனைவியுடன் அடிக்கடியே தும்பளை ஊர் வந்து செல்வார் காசிப்பிள்ளை.

சென்ற ஆவணி மாதம் தன் இளைய சகோதரராம் தேவபாலனை சந்தித்து மகிழ்ந்திட்டார். அவருடன் பதின் நான்கு ஆண்டுகளின் பின் தன் பிறந்த ஊரான தனங்கிழப்பு சென்று உறவுகளைக் கண்டு மகிழ்ந்து குலதெய்வ வழிபாடும் செய்து மன நிறைவும் பெற்றிட்டார்.

தேக ஆரோக்கியம், தன்னை அறியாதே தளர்ந்து விட்டதனால் இருதய நோயும் அவருடலை திடீரென தாக்கி நினைவிழந்து யாழ் போதனா வைத்தியசாலையில் ஒரு கிழமை வைத்தியர் பாதுகாப்புடன் பக்குவமாய் சிகிச்சையளித்தும் பயனேதும் ஏற்படாத வேளை மூத்த மகனும் நோயுற்ற செய்தியறிந்து கனடாவிலிருந்து கடுகியே ஓடி வந்து தந்தையாரைக் கண்டு ஆறுதல் மொழி பகன்றார். தனயனைக் காண துடித்திட்ட காசிப்பிள்ளையும் மன மகிழ்வுடனே கடு நோயும் வருத்த ஆனந்தக் கண்ணீருடனே இறைவனடியில் இணைந்திட்டார்.

இல்லாளும், அன்புப் பிள்ளைகளும் துடித்திடவும் மருமக்கள் மறுகியே நின்றிடவும், பேரப்பிள்ளைகள் ஏங்கியே நின்றிடவும், சகோதரர்கள், மைத்துனர்கள், உற்றார், உறவினர், சுற்றமும், நண்பர்களும் சூழ்ந்து கண்ணீர் பொழிந்திடவும் தன் ஆத்மாவை இறைவனடி இணைத்திட்டு பேரின்பப் பேறடைந்தார்.

"மரணம் என்பது நிச்சயிக்கப்பட்டது ஒன்றல்ல அது
அழைக்கப்பட்டது ஒன்றாகும்."
யாவரும் தேறி நிற்க.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்களும் அவற்றின் மகத்துவங்களும்

## 01. மாதுளம் பழம்

எல்லா காலங்களிலும் இலகுவில் கிடைக்க கூடிய அதிக மருத்துவ குணங்களை கொண்ட பழம் இது. மாதுளையின் பூ, பிஞ்சு, பழம், விதை, பட்டை, வேர் என்று அனைத்துமே மருத்துவ பயனுடையவை.

* மாதுளம் பழத்தின் மேல்பாகத்தில் துவாரம் செய்து அதனுள் பாதாம் எண்ணெய் விட்டு நெருப்பில் வாட்டி பின் சாப்பிட்டால் பல காலமாக உள்ள மார்பு வலி நீங்கும்.
* பாதி அளவு மாதுளம்பழத்தை நன்கு மென்று மூன்று நாட்கள் சாப்பிட்டு வர மலசிக்கல் நலமாகும்.
* நன்கு பழுத்த மாதுளம்பழ முத்துக்களை காலை 50 கிராம் மாலை 50 கிராம் என 15 நாட்கள் சாப்பிட்டு வந்தால் பித்த வியாதி தலைதூக்காது.
* மாதுளம் பழ சாற்றுடன் சர்க்கரை சேர்த்து காலையில் இரண்டு அவுன்ஸ் வீதம் பருகிவர ஞாபக சக்தி நன்கு அதிகரிக்கும்.
* இரண்டு நாளுக்கொரு முறை ஒரு மாதுளம்பழம் சாப்பிட்டுவர இரத்தம் சுத்தமாகும், புது இரத்தம் உருவாகும், உடம்பு ஆரோக்கியம் பெறும்.
* தினமும் காலையில் வெறும் வயிற்றில் மாதுளம்பழம் சாப்பிட்டுவர இருதயம் பலம் பெறும்.
* 300 கிராம் கருந்திராட்சை சாற்றுடன் அதே அளவு மாதுளம்பழ சாற்றையும் கலந்து அதனுள் 2 தேக்கரண்டி தேனையும் கலந்து இரவு உணவு உண்டபின் 30 நிமிடம் கழித்து தொடர்ந்து 40 நாட்கள் பருகிவர தூக்கமின்மை, தொடர்தலைவலி போகும், உடல் ஆரோக்கியம் மனதில் நிம்மதி ஏற்படும்.

## 02. கொய்யாப்பழம்

இதுவும் எமக்கு இலகுவில் கிடைக்க கூடிய ஒரு பழமாகும். நெல்லிக்கனிக்கு அடுத்தபடியாக அதிக விற்றமின்- C உடைய பழமாகும். அத்துடன் விற்றமின் A, B யும் இரும்பு, காபோவைதரேற்று, சுண்ணாம்பு, புரதம், கொழுப்பு சத்துகளும் கொய்யாப்பழத்தில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கதிகமாக சாப்பிட்டால் பசியை மந்தப்படுத்தல், பித்தம் ஆகிய விளைவுகளை ஏற்படுத்தும் எனவே அளவாக சாப்பிட வேண்டிய பழமாகும்.

* இரவு படுக்கைக்கு செல்லமுன் நன்கு கனிந்த கொய்யாப்பழத்தை சாப்பிட்டுவர மலசிக்கல் தீரும்.
* வளரும் குழந்தைகளுக்கு சாப்பிட்ட பின் தினமும் ஒரு துண்டு கொடுத்துவர பற்கள், எலும்புகள் நன்கு வளர்ச்சிபெறும்.
* நீரிழிவு நோயாளர்கள் இதனை சாப்பிட்டால் நோயைக் கட்டுப்படுத்தும்.
* இரவு படுக்கைக்கு போகமுன் கொய்யாபழத்தை பாலுடன் சேர்த்து சாப்பிட்டுவர இதயபடபடப்பு நீங்கி இதயம் சீராகும்.
* கொய்யா இலையை நன்றாகமென்று பின்பு வாயை கொப்பளித்து வந்தால் பல்வலி குறைவடையும்.
* கொய்யாப்பழத்தை உணவுக்கு முன் சாப்பிடுவது நல்லதல்ல. காலை, பகல் உணவிற்கு இடையிலும், மாலை 4 மணிக்கு முன்பும் சாப்பிடுவதே சிறந்தது. பழுக்காத காய்களை உண்பதும் நல்லதல்ல.

## 03. அப்பிள்

தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டால் மருத்துவமனைக்கு செல்ல வேண்டியதில்லை என்பது ஆங்கில பழமொழி. இதில் இருந்து அப்பிள் பழத்தின் முக்கியத்துவத்தினையும் தனித்துவத்தினையும் அறிய முடிகின்றது. உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துகள், விற்றமின்கள் அதிகளவில் உள்ள பழமாக இதுஉள்ளது.

* தினமும் ஒரு அப்பிளை வேகவைத்து தேன் அல்லது சக்கரையோடு குழந்தைக்கு ஒருவேளை உணவாக கொடுத்து வந்தால் மெலிந்த குழந்தைகள் நோயின்றி ஆரோக்கியமாக வளரும்.
* தினமும் மூன்று வேளை தேனுடன் அப்பிள்சற்றை கலந்து உணவுக்கு பின் 40 நாட்கள் பருகிவர ஆண்மைக்குறைவு நீங்கும்.
* அப்பிள் பழ துண்டுகளை தேனில் ஊறப்போட்டு சாப்பிட்டு வந்தால் கண்களுக்கு ஒளி கிடைக்கும் முகம் மேனி அழகுபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இரண்டு அப்பிள் பழங்களை இரவில் தண்ணீரில் ஊறவைத்து அவைகளை காலையில் எடுத்து அரைத்து பாலில் கலந்து சாப்பிட்டுவர "சோமனாப்புலிசம்" என்ற தூக்க நோய் குணமாகும்.
* பேதியை தடுக்க கனிந்த அப்பிளை இரண்டாக பிளந்து வேக வைத்து அதனோடு சிறிது தேனும் கலந்து சாப்பிட்டுவர பேதி குணமாகும்.
* மலச்சிக்கலை நீக்கவும் வாய்புண்ணை குணமாக்கவும் இது பெரிதும் உதவுகின்றது.

## 04. பேரீச்சம் பழம்

மிகவும் சத்துள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் பழம் பேரீச்சம் பழமாகும். அரபு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. பதப்படுத்தப்பட்ட பழம் பல ஆண்டுகளுக்கு பழுதடையாமல் இருக்கும். ஆயுர்வேத, யுனானி வைத்திய முறைகளில் இது பயன்படுத்தப்படுகின்றது. இதில் விற்றமின் ஏ அதிகமாக உள்ளது.

* மெலிந்த குழந்தைகள் என்ன சாப்பிட்டாலும் உடல் பெருக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு தினமும் காலை, மதியம், மாலை, இரவு என நான்கு வேளை பாலில் ஊற வைத்த 2-3 பழங்கள் கொடுத்துவர உடல் பெருத்து பலம் பொருந்திய, சக்திமான்களாக, திகழ்வர். மெலிந்த பெண்களும் பாவித்தால் உடல் அழகுற்று திகழ்வார்கள்.
* கண்பார்வை குறைந்தவர்கள், கண்பார்வை மங்கலானவர்கள் தினமும் காலை, இரவு என இருவேளை பாலில் ஊறவைத்து சாப்பிட்டுவர கண்பார்வை தெளிவடையும்.
* தாது விருத்திக்கு மிகவும் உதவும் பழம் பேரீச்சம்பழமாகும். கொட்டை நீக்கிய பேரீச்சம்பழத்தை தேனில் ஊறவைத்து இரவு படுக்கைக்கு போகமுன் சாப்பிட்டு பால் பருகிவர தாது விருத்தியோடு உடல் ஆரோக்கியம் பெறும்.
* நீரிழிவுக்காரர்கள் இனிப்பு சுவையுடைய இப்பழத்தை சாப்பிட பயப்படுவர். ஆனால் சாப்பாட்டின் பின் இரு பழங்கள் சாப்பிட்டு வர சத்து குறைந்த நீரிழிவு தேகக்காரர்களுக்கு சத்தை கொடுத்து ஆரோக்கியமானவர்களாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. விளாம்பழம்

குறைந்த செலவில் நிறைந்த மருத்துவ குணம் கொண்ட பழம் விளாம்பழமே ஆகும். இதில் அதிக சுண்ணாம்பு, புரதம், மாச்சத்துக்கள் இருக்கின்றன. இதனை சாப்பிடுவதால் எந்தவித கெடுதலும் கிடையாது. நன்கு பழுத்த விளாம்பழம் சாப்பிடுவதற்கு ஏற்றது. இது குளிர்ச்சி தரும் இயல்புடையது.

✶ தினமும் காலை,மாலை இரு வேளைகளிலும் இப்பழத்தை தொடர்ந்து 10 நாட்கள் சாப்பிட்டு வந்தால் நெஞ்சுவலி குணமாகும்.

✶ தினமும் காலை உணவின்பின் நன்கு பழுத்த விளாம்பழத்துடன் வெல்லமோ சர்க்கரையோ சேர்த்து 21 நாட்கள் சாப்பிட பித்தம் சம்பந்தமான நோய்கள் தீரும். உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

✶ தினமும் விளாம்பழத்தை கொடுத்தால் ஓரிரு மாதங்களில் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி பெறும். தேகமும் ஆரோக்கியத்துடன் காணப்படும். நோய்களும் அணுகாது. எப்போதும் களைப்பின்றி இருப்பார்கள்.

✶ விளாமர இலைகளை அரைத்து தினமும் இரவில் பித்த வெடிப்புள்ள இடத்தில் தடவிவந்தால் பித்த வெடிப்பு குணமாகும்.

✶ நன்கு பழுக்காத விளாங்காயை கொதிநீரில் அவித்து பின் உடைத்து உள்ளிருக்கும் சதையை சாப்பிட்டு பசும்பாலினை தினமும் காலையில் ஒரு வார காலத்திற்கு குடித்து வந்தால் சீதபேதி குணமாகும்.

## 06. மாம்பழம்

வேறு எந்தப் பழங்களையும் விட மாம்பழத்தில் விற்றமின் A அதிகமாக உள்ளது. மாம்பழத்தை காலையோ மாலையோ சாப்பிட்ட பின் தனியாகத் தான் சாப்பிட வேண்டும். உணவோடு சாப்பிட்டால் அதன் சத்துக்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும்.

✶ காலை உணவு முடித்து 30 நிமிடங்களுக்குப் பின் 50 கிராம் மாம்பழச்சாற்றுடன் ஒரு தேக்கரண்டி நெய்யும், ஒரு தேக்கரண்டி தேனும் கலந்து பருகி வர வயிற்றுப்புண் குணமாகும். இதன் போது வயிற்றுப்போக்கு அதிகம் காணப்பட்டால் தேனை அதிகமாக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சதைப்பற்றுள்ள இரு மாம்பழங்களை எடுத்து சாறு பிழிந்து தேன், குங்குமப்பூ, ஏலக்காய் தூள், பச்சைக் கர்ப்பூரம் இவைகளை சிறிதளவு எடுத்து இதனுடன் கலந்து பாலையும் சேர்த்து சாப்பிட்டால் இருதயம் பலப்படுவதுடன் தாதும் விருத்தியடையும்.

* மாம்பழக் கொட்டையிலுள்ள பருப்பையெடுத்துச் சுட்டு சிறிது அவ்வப்போது சாப்பிட்டு வந்தால் சிறுநீர்ப்பையிலுள்ள கற்களைக் கரைக்கும்.

* இரவுச் சாப்பாட்டிற்கு பின் மாம்பழத்தை சாப்பிட்டு விட்டு ஒரு ரம்ளர் பாலையும் பருகி வந்தால் முகம் அழகுபெறும். தோல் சுருக்கம் நீங்கும்.

* மாம்பழத்தை பிழிந்து சாறெடுத்து அதை சுடுநீரில் கலந்து கொஞ்சம் சீனி சேர்த்துப் பருகினால் வாந்திபேதி குணமாகும்.

* மாம்பழத் தோலை அரைத்து , தேன் கலந்து சாப்பிட்டுவர சீதபேதி குணமாகும்.

* மாம்பிஞ்சுகளை நிழலில் காய வைத்து வாடவிட்டு அதனை உப்பு நீரில் போட்டு வெய்யிலில் காய வைத்து அவ்வப்போது உணவோடு சேர்த்து சாப்பிட்டு வர பசி எடுக்கும்.

## 07. திராட்சைப் பழம்

இப்பழத்தில் பெருமளவு நீர் இருக்கின்றது. மேலும் கொழுப்பு சத்தும், மாச்சத்தும் கணிசமாக இருக்கின்றது. இத்துடன் இரும்பு, செம்பு, கல்சியம், பொஸ்பரஸ் சத்துக்களும் கலந்துள்ளன. விற்றமின் $B_1$, $B_2$, $B_3$ உயிர்சத்துக்களும் இதில் உள்ளன. இப்பழத்தை வாயில்மென்று சாப்பிடுவதை விட சாறெடுத்துப் பருகுவது உடம்பிற்கு மிகவும் நல்லது.

* 100 கிராம் திராட்சைப்பழத்தை எடுத்து விதைகளை நீக்கி சாறெடுத்து காலை, மதியம், மாலை என மூன்று வேளைகள் ஒரு மாதத்திற்கு பருகிவர குடற்புண் குணமாகும். குடற்புண் இல்லாதவர்கள் இதேபோல் பருகிவர உடல் ஆரோக்கியத்துடன் திகழ்வர்.

* 100 கிராம் திராட்சையை சாறுபிழிந்து நான்கு வேளைகள் குறைந்தபட்சம் 2 மாதங்கள் அருந்திவர இரத்தச்சோகை குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கருப்பு திராட்சையின் விதைகளை நீக்கி சாறெடுத்து, அதில் சர்க்கரையும் சேர்த்து காலை, மாலை, இரவு வெறும் வயிற்றில் 10 நாட்களிற்கு பருக நல்ல பசி ஏற்படும்.

* பகல் உணவிற்குப்பின் தினமும் குறைந்தது 10 முதல் 20 வரை பச்சைத்திராட்சைப் பழங்களை 10 நாட்களுக்கு சாப்பிட தலைவலி தீரும்.

* சிறிதளவு மிளகைப் பொடி செய்து திராட்சை சாற்றுடன் பருகிவர சிறுநீர் பிரச்சினை தீரும்.

* பச்சை திராட்சையை சாறு எடுத்து மதிய உணவிற்குப்பின் அரை ரம்ளர் அளவில் 1 வாரம் பருகி வர வாய்புண், நாக்குப்புண் குணமாகும். இச்சமயத்தில் உப்பு , புளி, காரத்தை தவிர்ப்பது நல்லது.

* கறுப்பு திராட்சையை சாறெடுத்து காய்ச்சிய பசும்பாலுடன் கலந்து தினமும் இரவில் ஒரு மாதத்திற்கு பருகிவர ரத்தம் சுத்தமாகும். உலர்ந்த திராட்சையையும் பயன்படுத்தலாம்.

* மாதவிடாய் நிற்கும் காலத்தில் பெண்களின் உடலில் பலவிதமான பாதிப்புகள் ஏற்படும். இந்தப் பாதிப்புக்களை போக்க காலை, மாலை இருவேளைகளிலும் ஒரு ரம்ளர் பழச்சாற்றை 10 நாட்கள் பருகிவர பாதிப்புக்கள் விலகும்.

## 08. புளியம்பழம்

புளியம் பழத்தில் விற்றமின் A, B இருக்கின்றன. விற்றமின் C குறைந்த அளவில் இருக்கிறது. இத்துடன் சுண்ணாம்பு, இரும்புச்சத்துக்களும் உள்ளன.

* எலுமிச்சைப்பழ அளவு சுத்தமான புளியை எடுத்து, அதே அளவு சுத்தமான சுண்ணாம்பை சேர்த்து உள்ளங்கையில் வைத்து பிசைந்து வருகையில், இரண்டும் கலந்த பின் மெல்ல சூடேறும். அச் சூடு ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாத அளவில் இருக்கும்போது அதை அடைபோல தட்டி தேள் கொட்டிய இடத்தில் அப்பினால் அது ஒட்டிக் கொள்ளும். விஷம் புளியம்பழத்தில் இறங்கிவிடும்.

* ஒரு ரம்ளர் நீரில் சிறிதளவு புளியை கரைத்து குடிக்க வாந்தி நிற்கும். சிறிதளவு புளியையும், மஞ்சளையும் கலந்து லேசாக சூடாக்கி பற்று போட்டு வர வீக்கம் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* புளியம்பழத்தை சிறிதளவு எடுத்து அதனோடு உப்பு தூளையும் கலந்து நன்றாக பிசைந்து பல்வலியுள்ள இடத்தில் வைத்து அழுத்த பல்வலி குணமாகும்.

* உடலின் உஷ்ணத்தை அதிகரிக்க செய்யும். அதிகமாய் புளியை ருசிக்காக பயன்படுத்துகிறவர்களுக்கு வயிற்றுக்கோளாறை உண்டு பண்ணும் ரத்தத்தையும் சுண்ட வைக்கும். புதுப் புளியை விட பழைய புளிக்கே வேகம் அதிகம்.

## 09. நெல்லிக்கனி

வேறு எந்த கனியிலும் இல்லாத அளவு விற்றமின் C அதிகமாக இருக்கிறது. நெல்லிக்காயில் பெரு நெல்லிக்காய், அரு நெல்லிக்காய் என இருவகையுண்டு. பெரு நெல்லிக்காயை பச்சையாக சாப்பிடுவது தான் உடலுக்கு நல்லது.

* கிணறு வெட்டும்போது நீர் உவர்ப்புத் தன்மை கொண்டதாக இருந்தால் நெல்லிமரப் பட்டையைப்போட்டால் நீர் சுவையாக மாறிவிடும்.

* உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்குவதில் விற்றமின் C பெரும் பங்கு வகிக்கின்றது. பற்கள், பல்லீறுகள், தோல் போன்ற உறுப்புக்களை தாக்கவும் விற்றமின் C உதவுகிறது.

* நெல்லிக்கனியின் விசேடம் அதனைக் காயவைத்தாலும், ஊறுகாய் போட்டாலும் விற்றமின் C அழிவதில்லை. டானின் என்ற ஒரு பொருள் நெல்லியில் இருப்பதால் விற்றமின் C க்கு எவ்வித அழிவும் ஏற்படுவதில்லை.

* நெல்லிக்கனியை இடித்து சாறு எடுத்து இரு தேக்கரண்டி சாற்றில் ஒரு தேக்கரண்டி அளவு எலுமிச்சைப் பழச்சாற்றையும் சேர்த்துக் கலக்கி காலை வேளையில் மட்டும் 3 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் பூச்சிகள் வெளியேறிவிடும்.

* நெல்லிக் கொட்டைகளை நீரில் ஊறவைத்து அந்த நீரை குடித்து வந்தால் ஜுரம் கட்டுப்படும்.

* நெல்லிக்கனிகளை நன்றாக காயவைத்து பின் அவற்றில் இரண்டு மூன்று கனிகளை இளஞ்சூடான நீரில் இரவு முழுக்க ஊறவைத்து, காலையில் வடிகட்டி தேன் சேர்த்து உண்டு வந்தால் சளித்தொல்லை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நெல்லிக்கனி சாறு பருகி வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.
* நெல்லி மரப்பட்டையை நீரில் போட்டு வேகவைத்து, அந்த நீரை உடல் முழுக்க பூசி சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் குளித்து வந்தால் தோல் நோய்கள் அணுகாது.

## 10. தக்காளிப்பழம்

தக்காளிப்பழத்தை நன்றாக கழுவி விட்டுத்தான் பயன்படுத்த வேண்டும். ஏனெனில், அதன் காம்புப் பகுதியில் சில நுண்கிருமிகள் இருந்து கொண்டே இருக்கும். தக்காளியை சமையலுக்கு பயன்படுத்துதோடு, பழத்தை அப்படியே உண்பதாலும் உடலுக்கு மிகவும் நல்லது. இப்பழத்தில் எல்லாவித சத்துக்களும் அபரிதமாக இருக்கின்றன.

* தினமும் காலை, இரவு இருவேளைகளிலும் உணவு உண்டபின் இரண்டு பழங்களை சாப்பிட்டு வர உடலில் புதிய இரத்தம் உருவாகும்.
* பல நாட்கள், பலமாதங்கள் நோய்வாய்ப்பட்டு பலவீனமாய் இருப்பவர்களுக்கு தக்காளி சூப் வைத்துக் கொடுத்தால் உடல் பலவீனம் போய் தேகத்தில் தெம்பு ஏற்படும்.
* மெலிந்த குழந்தைகளுக்கு தினமும் காலையில் தேன் கலந்த தக்காளி சாற்றை கொடுத்து வர சில மாதங்களில் குழந்தை ஆரோக்கிய மடைந்து விடும்.
* தொண்டைப்புண் உள்ளவர்கள் முதலில் உப்புக் கலந்த நீரை தொண்டைப் புண்ணில் படும்படி கொப்பளிக்க வேண்டும். பின்பு தக்காளிச் சாறைப் பருகிவர தொண்டைப்புண் குணமாகும். தக்காளிப்பழ சூப்பை காலை, மாலை ஒரு ரம்ளர் வீதம் 20 நாட்கள் தினமும் பருகிவந்தால் தோல் சம்பந்தமான நோய்கள் போகும். உடலில் பளபளப்பு ஏற்படும்.
* தக்காளிப்பழத்தோடு பாசிப்பருப்பு சேர்த்து கூட்டு வைத்து தினமும் சாப்பிட்டு வந்தால் கண்பார்வை தெளிவாகும்.
* நீரிழிவு நோயாளர்கள், பித்த நோயாளர்கள் அதிகமாக பயன்படுத்தக்கூடாது. சளி பிடித்தவர்கள் குறைத்து உண்ணலாம்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

